1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம். செங்கை மாவட்ட ஆட்சியாளர் 1972–73-ம் ஆண்டில் வவும்கப்பட்ட விவசாய மானியத்தின்கீழ் எல்லாபுரத்தில் துணை விவசாய கிடங்கு கட்டுவதற்கான செயற்குறிப்பை செங்கை மாவட்ட வேளாண்மை அதிகாரி இடம் கேட்டுள்ளார். இத்துணைக்கிடங்கு கட்டுவதற்காக ரூ. 12,208 ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்குறிப்பு கிடைக்கப்பெற்றதும் துணை கிடங்கு கட்டுவதற்கான நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்போது ஒதுக்கப்பட்டு இருக்கிற 12,208 ரூபாய் முதல் கட்டமாக வேலைகள் எடுத்துக் கொள்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, அடுத்த ஆண்டுக்குள் அந்த வேலையை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உடனடியாகக் கட்ட வேண்டுமென்பதற்காகத்தான் கோட்ட ஆட்சியாளரிடம் ரூ. 12,208 ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31—1—1973-க்குள் அந்த வேலையை முடிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முடிவடையும் என்று நம்புகிறேன்.

Tractor service by Agro-Industries Corporation

* 205. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the tractor service provided at present by the Agro-Industries Corporation in this State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவையின் முன் அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது போன்ற கழகங்களை எல்லாம் மாவட்டங்களிலும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்துவதற்கு இப்போது திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதை விஸ்தரிக்கவும் நடவடிக்கைகள் விரிவாக எடுக்கப்படும்.

@ 418–426-ம் பக்கங்களில் இணைப்பு—4 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1972 டிசம்பர் 15

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இந்த பவர் ஸ்ப் ரேயர்களை ரிப்பேர் செய்வதற்கென்று அக்ரோ இன்டஸ்உரீஸ் மூலமாகச் சிறிய அளவிலே ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஒர்க்-ஷாப் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே வேளாண்மை துறை மூலமாக ஒன்றியங்களில் உள்ள மஸ்தூர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கும் 374 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒவ்வொருவர் பயிற்சி பெற்று இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சியின் காரணமாகப் பழுது பார்க்கும் பணி இப்போது ஒன்றியங்களிலேயே எடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நடமாடும் ஊர்திகள் மூலமாக அப்படி பழுதடைந்த கருவிகளைப் பார்ப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : பலவிதமான டிராக்டர்களை வழங்குவதிலே அவைகளுக்குப் பழுது நேரும்பொழுது, அந்த ஊர்தி அதற்கு வேண்டிய கருவிகள் வழங்காத காரணத்தினால் பல டிராக்டர்கள் பழுதடைந்த நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, நல்ல டிராக்டர்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நல்ல டிராக்டர்கள்தான் வழங்கப்படுகின்றன. பழுதடைந்ததையெல்லாம் பழுது பார்ப்பதற்கும், அதற்கு வேண்டிய துணைக் கருவிகளை வாங்கி வைப்பதற்கும், அக்ரோ–இன்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனால் நிதி ஒதுக்கப்பட்டு, அவர்கள் இப்பொழுது ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி வைத்து, அந்த வேலைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆங்காங்கு வேண்டிய துணைக் கருவிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ஜி.டி.ஆர். டிராக்டர்கள் சீக்கிரம் பழுதடைந்துவிடுகின்றன. அவற்றை பழுது பார்ப்பதற்கு சிரமமாக இருக்கிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் குறிப்பு வரவில்லை. அதைப்பற்றி கவனப்படுத்தினால், அதற்கான நடவடிக்கை எடுத்து, துரிதப்படுத்தப்படும்.